# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,407 — 1962 නොවැම්බර් 30 වැනි සිකුරාදා — 1962.11.30

13,407 ம் இலக்கம் — 1962 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்–வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 89 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகாரநிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நானாவிதம் .. .. .. | — |


## துணை விதிகள்

### கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான, கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 257) 42 ஆம் பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து புலோப்பளை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சரால், அப்பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

வி. சீ. ஜயசூரிய,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சு.

கொழும்பு,
8.11.1962

#### வாகன, மிருக வரி பற்றிய துணைவிதிகள்

1. (1) கட்டளைச் சட்டத்தின் 39ஆம் பிரிவின்கீழ் திரட்டும் வாகன மிருக வரியின் பொருட்டு அந்த வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது ஆட்சியில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும், இதன் அட்டவணை " அ "வில் குறித்துள்ளதும் சங்கக் கந்தோரில் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான படிவத்தின்படி ஒரு விபர அட்டவணையை தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

(2) பந்தி (1)இல் சொல்லப்படும் அட்டவணை, கட்டளைச் சட்டத்தின் 39ஆம் பிரிவின்கீழ் வரி செலுத்தப்பாத்திரப்பட்டவரால், 1963ஆம் வருடத்தின் பொருட்டு, 1963ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதிக்குப் பிந்தாமல், எழுதி நிரப்பி தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும். அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தமது ஆட்சியில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிந்திய வருடம் எதற்கும் அத்தகைய அட்டவணை தரும்படி கேட்கப்படமாட்டார்.

2. கட்டளைச் சட்டத்தின் 39 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, துணைவிதி 1இல் சொல்லப்படும் அட்டவணையை கொடுத்த ஒவ்வொருவரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1963ஆம் ஆண்டுக்கு, அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும், அவ்வருடத்து மார்ச் மாதம் 31ஆம் திகதிக்குப் பிந்தாமல், வரி செலுத்தவும் ;

(ஆ) பிந்திய வருடம் ஒவ்வொன்றுக்கும், அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்கள், மிருகங்களில் அப்பிந்திய வருடத்தில் முப்பது நாட்களுக்குமேல் அவரது ஆட்சியில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பனவற்றுக்கு அவ்வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் வரி செலுத்தவும் பாத்திரராவார்.

3. எவரேனும் பந்தி 1இல் சொல்லப்படும் அட்டவணையைக்கொடுத்த பின்னர், அந்த அட்டவணையில் சொல்லப்படாததும் சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகி தால் அல்லது துணைவிதி 1இன் கீழ் அட்டவணை எதையும் கொடுக்காத எவரும் முதல் முறையாக அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அவர் அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை வாங்கிய அல்லது வைத்திருக்க வேனும் உபயோகிக்கவேனும் தொடங்கிய திகதியிலிருந்து எழு தினங்களுக்குள் அவ்விதம் வாங்கியதை வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறிப்பிட்டு, தலைவருக்கு எழுத்துமூலமான ஒரு அறிவித்தல் அனுப்பி, இதன் அட்டவணை " அ "வில் குறித்துள்ள படிவத்தின்படி எழுதப்பட்ட கூற்று ஒன்றினை தாமதமின்றி கொடுக்கவும் வேண்டும்.

4. கட்டளைச் சட்டத்தின் 39 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, துணைவிதி 3 இல் சொல்லப்படும் எழுத்துமூலமான கூற்றைக் கொடுத்துள்ள ஒவ்வொருவரும், அக்கூற்று எவ்வருடத்தில் கொடுக்கப்பட்டதோ அவ்வருடத்துக்கும் பிந்திய வருடம் ஒவ்வொன்றுக்கும், அக்கூற்றில் காட்டப்பட்டுள்ள, அவருடைய ஆட்சியில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அவருக்கு அதன்பொருட்டு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரி செலுத்தப் பாத்திரராவார்.

5. (1) துணைவிதி 1 இல் சொல்லப்படும் அட்டவணையை அல்லது துணைவிதி 3இல் சொல்லப்படும் எழுத்துமூலமான கூற்றைக் கொடுத்த பின்னர் அந்த அட்டவணையில் அல்லது கூற்றில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதன்பொருட்டேனும் வரி செலுத்தும் பொறுப்பிலிருந்து தவிர்த்துவிடும்படி கட்டளைச் சட்டத்தின் 39 (3)ஆம் பிரிவின்கீழ் கோரும் ஒவ்வொருவரும் அவ்விதம் கோருதற்கான காரணங்களைக்காட்டி தவிர்த்து விடுதற்கான தமது கோரிக்கைபற்றி தலைவருக்கு உடனே எழுத்தில் அறிவிக்கவேண்டும்.

(2) துணைவிதி 1இல் சொல்லப்படும் அட்டவணையை அல்லது துணைவிதி 3இல் சொல்லப்படும் எழுத்துமூலமான கூற்றைக் கொடுத்த பின்னர் எவ்வாகனத்தையேனும் அல்லது மிருகத்தையேனும் வைத்திருக்காமலேனும் உபயோகிக்காமலேனும் விடும் ஒவ்வொருவரும், அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை தாம் ஆட்சி பண்ணமல், வைத்திருக்காமல் அல்லது உபயோகிக்காமல் விட்டுவிட்டதாக உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவித்து, அந்த வாகனத்தை அல்லது மிருகத்தை அவர் விற்றுவிட்டால் அதனை வாங்கியவரின் பெயரையும் விலாசத்தையும் தலைவருக்கு எழுதி அறிவிக்கவேண்டும்.

6. (1) எவராலேனும் எவ்வாகனத்துக்கும் வரி செலுத்தப்பட்டதும், அவ்விதம் வரிசெலுத்தப்பட்ட வாகனம் ஒவ்வொன்றிற்கும், இதன் அட்டவணை " ஆ "வில் குறிக்கப்பட்டுள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக் காட்டும் எழுத்துக்களில் அந்த வாகனத்துக்கு இயைபுள்ள எழுத்துக்களையும் அது எவ்வருடத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவேட்டில் உள்ள அந்த வாகனத்தின் இலக்கத்தையும் கொண்ட உலோகத் தகடு ஒன்றைக் தலைவர் அவருக்குக் கொடுக்கவேண்டும்.

(2) அத்தகைய தகடு எதுவும் உபயோகத்தினல் அல்லது வேறு விதத்தில் தெளிவாகத் தெரியாதுபோனல் அல்லது உருவழிந்துபோனல் அதன் சொந்தக்காரர் அதைத் தலைவரிடம் திருப்பிக்கொடுத்து ஐம்பது சதமும் செலுத்தினல் புதிய தகடு ஒன்றைப் பெறும் உரிமையுள்ளவரர்வார்.

(3) அத்தகைய தகடு எதுவும் காணமற்போய்விட்டது அல்லது களவாடப்பட்டுவிட்டது என்று சத்தியக்கடுதாசி மூலமாகவேனும் வேறு விதத்திலேனும் தலைவருக்கு நம்பிக்கையுண்டாக்குமாயின் அதன் சொந்தக்காரர் விண்ணப்பித்து அறுபது சதமும் செலுத்துங்கால், தலைவர், சொந்தக்காரருக்கு புதிய தகடு ஒன்றைக் கொடுக்கலாம்.

7. (1) ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தககாரர் அல்லது பொறுப்பாளி, துணைவிதி 6 இன் கீழ் அந்த வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை அந்த வாகனத்தின் துலக்கமான ஒரு பகுதியில் மாட்டிவைக்கவேண்டும்.

(2) ஒரு வாகனத்துக்குக் கொடுக்கப்பட்ட தகட்டை வேறு எந்த வாகனத்திலும் மாட்டிவைக்கக்கூடாது.

8. ஒரு வரி கொடுக்கவேண்டிய வாகனம் அல்லது மிருகம் எதையும், எவரேனும் தமது ஆட்சியில், பாதுகாப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றுரா என்பதை நிச்சயித்தற்பொருட்டு தலைவரேனும் தலைவரால் அதன் பொருட்டு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும், அவசியமாயின் கிராமத் தலைமைக்காரரின் அல்லது ஒரு பொலிசு உத்தியோகத்தரின் உதவியோடு காலை 8 மணிக்கும் பின்னேரம் 5 மணிக்குமிடையே எக்காணியிலும் அல்லது கட்டிடத்திலும் பிரவேசிக்கலாம். அக்காணிக்கு அல்லது கட்டிடத்துக்கு பொறுப்பாளியாயிருப்பவர், தலைவருக்கு அல்லது அத்தகைய வேறு பேருக்கு இந்தத் துணைவிதியின் கீழ் அவரது அதிகாரங்களைச் செலுத்துதற்கு தேவையான வசதிகளை நல்க வேண்டும்.

9. தெரு அல்லது பாதை எதிலும் சென்றுகொண்டிருக்கும் எந்த வாகனத்தையும், அந்த வாகனத்தில் மாட்டிவைக்கப்படவேண்டுமென்று 7ஆம் துணைவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைக் பார்வையிடுதற்காக தலைவரேனும் தலைவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் நிறுத்துவதும் மறித்துவைப்பதும் சட்ட முறையாகும்; அவ்வாகனத்தின் சாரதி அல்லது பொறுப்பாளி எவரும், அவ்விதம் கேட்கப்படுங்கால் அந்த வாகனத்தை நிறுத்தி தலைவரை அல்லது அத்தகைய வேறு பேரை அத்தகட்டைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

10. யாழ்ப்பாண மாவட்டத்துக் கிராமச் சங்கங்கள் சிலவற்றுல் ஆக்கப்பட்டு, 1940, டிசெம்பர் 20இன் 8,697ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வாகன, மிருக வரி பற்றிய துணைவிதிகள், புலோப்பளை கிராமப் பிரதேசத்துக்கு அவை பொருந்துவதைப் பொறுத்தவரை, இத்தால் நீக்கப்படுகின்றன.

### அட்டவணை " அ "

படிவம்

இல. : ————.

வட்டார இல. ————.

புலோப்பளை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சங்கம்.

வாகன, மிருக வரி பற்றிய துணைவிதிகளின் தாற்பரியப்படி கொடுக்கப்படவேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் அட்டவணை.

சொந்தக்காரரின் அல்லது வைத்திருப்பவரின் பெயர் : ————.

முகவரி : ————.

கிராமம் : ————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபரம் | வார்த்தைகளில் எண்ணிக்கை | குறிப்புகள் (துவிச்சக்கர வண்டிகளாயின் உற்பத்தியாளரின் இலக்கம் தருக) |
|---|---|---|
| பாரவண்டிகள், பிரயாணவண்டிகள் றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இனவண்டிகளும் .. | | |
| சகல இன இரட்டை மாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் | | |
| சகல இன ஒற்றைமாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் .. | | |
| றிக்ஷோக்கள் | | |
| கைவண்டிகள் | | |
| துவிச்சக்கர வண்டிகள் | | |
| யானைகள் .. | | |
| குதிரைகள் .. | | |
| கோவேறு கழுதைகள் | | |
| கழுதைகள் .. | | |

நானறிந்தவரை மேலே தரப்பட்டிருக்கும் விபரங்கள், சகலவகையிலும், உண்மையானவையும் சரியானவையும் என நான் உறுதிப்படுத்துகிறேன்.

————,

சொந்தக்காரரின் அல்லது வைத்திருப்பவரின் கையொப்பம்.

திகதி : ————.

### அட்டவணை " ஆ "

| | | |
|---|---|---|
| பாரவண்டி, பிரயாணவண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இன வண்டி ஒவ்வொன்றுக்கும் | .. | பு. வ. |
| இரட்டை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | .. | பு. இ. வ. |
| ஒற்றைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | .. | பு. ஒ. வ. |
| றிக்ஷோ ஒவ்வொன்றுக்கும் .. | .. | பு. றி. |
| கை வண்டி ஒவ்வொன்றுக்கும் .. | .. | பு. கை. |
| துவிச்சக்கரவண்டி ஒவ்வொன்றுக்கும் | .. | பு. து. |

### மலகூட வேலையும் தோட்டிவேலையும்

11. (1) சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, மலகூடவேலையையும் தோட்டி வேலையையும் பற்றிய, திட்டத் துணைவிதிகளின் 6ஆம் பாகத்து 6ஆம் துணைவிதியின் தேவைக்கு, மாதந்தோறும் சங்கத்துக்கு செலுத்த வேண்டிய மலகூடவேலைக் கட்டணம் வாளி ஒன்றுக்கு இரண்டு ரூபாய் ஐம்பது சத வீதமாயிருக்கவேண்டும்.

(2) சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, மலகூடவேலையையும் தோட்டி வேலையையும் பற்றிய, திட்டத் துணைவிதிகளின் 6ஆம் பாகத்து 11ஆம் துணைவிதியின் தேவைக்கு, மாதந்தோறும் சங்கத்துக்கு செலுத்த வேண்டிய தோட்டிவேலைக் கட்டணம் ஐம்பது சதமாயிருக்கவேண்டும்.

### அருவருப்பும் அபாயமும் விளைக்கும் வியாபாரங்கள்

12. 1957, மே 3 இன் 11,114ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அருவருப்பும் அபாயமும் விளைக்கும் வியாபாரங்கள் பற்றிய துணைவிதிகள், துணைவிதி 1இல் அதன் பந்தி (2)இன் இறுதியில் கீழ்க்காணும் புதிய இனத்தை வைப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.

(ஈ) மொத்த அல்லது சில்லறை வியாபாரத்தின் பொருட்டு அழுகக்கூடிய உணவுப் பொருட்களையும் பதார்த்தங்களையும் சேகரித்து வைத்தல்.

### பொது அறிவித்தல்கள்

13. (1) சங்கத்தின் கட்டளைப்படி பார்வைக்குவைக்கப்பட்டுள்ள அறிவித்தல் எதையும் ஏவரேனும் உருவழிக்கவேனும் அழிக்கவேனும் கூடாது.

(2) சங்கத்தின் துணைவிதி எதன்கீழும் ஆரம்பிக்கப்பட்ட எவ்வேலையையும் செய்கையில் தலைவரின் அதிகாரத்தால் போடப்பட்ட அறிவித்தல் எதிலும் குறிக்கப்பட்டுள்ள பணிப்புரைகளை, எவரும் வேண்டுமென்று மீறவேனும் அறிவித்தற் பலகை, வேலிக்கம்பம் அல்லது தடுப்பு அல்லது வேறு பொருள் எதையும் அகற்றவேனும் கூடாது.

### வேலி போடப்படாத நெல்வயல்களும் காணிகளும்

14. (1) கிராமச் சங்கப் பிரதேச எல்லைக்குள் வதியும் பயிர்ச் செய்கைக்காரர் ஒவ்வொருவரும் அவரது நெல் வயலை அல்லது பயிரிடப்பட்ட வேறு காணியைச் சுற்றி அந்த நெல் வயலுக்குள் அல்லது பயிரிடப்பட்ட காணிக்குள் ஆடு மாடு நுழைவதைத் தடுக்கத்தக்கதாக, ஒரு வேலி போடவேண்டும்.

(2) ஆடு மாடுகளின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும், பகல் வேளையில், அவரது ஆடு மாடுகளை யாராவது பார்த்துக்கொள்ளும்படி செய்தல் வேண்டும்.

(3) ஆடு மாடுகளின் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் அவரது ஆடு மாடுகள் அலைந்து திரிந்து பயிரிடப்பட்ட நெல் வயல்களுக்குள் அல்லது காணிக்குள் நுழையாவண்ணம் தடுக்கக் தக்கதாக பட்டியில் அடைத்து வைப்பிக்க அல்லது கட்டிவைப்பிக்க வேண்டும்.

### சந்தைகள்

15. (1) கிராமச் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சந்தைகளையும் முறைச் சந்தைகளையும் பற்றிய, திட்டத் துணைவிதிகளின் 27ஆம் பாகத்து 1ஆம் துணைவிதியின் தேவைக்கு பளையிலுள்ள கிராமச் சந்தையின் மத்தியிலிருந்து ஒரு மைல் விட்டார்த்தமுள்ள ஒரு வட்டத்துள் உள்ள பிரதேசம் " சந்தைப் பிரதேசம் " ஆகும்.

(2) கிராமச் சந்தை எதிலுமுள்ள எந்த இடத்தையும் உபயோகிப்பதற்கேனும் ஆட்சிபண்ணுவதற்கேனும் கீழ்க்காணும் வீதங்களின்படியான ஒரு கட்டணம் அறவிடப்படவேண்டும் :—

| | | நாளொன்றுக்கு |
|---|---|---|
| (1) காய்கறிச் சந்தையில் பதினெட்டுச் சதுர அடிக்கு மேற்படாத ஒரு திறந்த இடத்துக்கு | .. | 15 சதம் |
| (2) காய்கறிச் சந்தையில் பதினெட்டுச் சதுர அடிக்கு மேற்படாத மூடிய இடத்துக்கு | .. | 30 சதம் |
| (3) மீன் சந்தையில் பதினெட்டுச் சதுர அடிக்கு மேற்படாத திறந்த இடத்துக்கு .. | .. | 30 சதம் |

### உணவுப் பொருள் விற்பனை

**16.** சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டத் துணைவிதிகளின் 13ஆம் பாகத்தில் காணப்படும் உணவுப் பொருள் விற்பனை பற்றிய துணைவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) துணைவிதிகள் 1ஆம், 3ஆம் " மீன் " என்னும் பதத்துக்குப் பதிலாக அத்துணைவிதிகளில் அப்பதம் காணப்படுமிடங்களிலெல்லாம் " மீன், அரிசி, கறிச் சரக்குகள் " என்னும் பதங்களை வைத்தும் ;

(2) துணைவிதி 2 இல்—

(அ) " மீன், காய் கறிகள் " என்னும் பதங்களுக்குப் பதிலாக " மீன், அரிசி, கறிச் சரக்குகள், காய் கறிகள் " என்னும் பதங்களை வைத்தும் ;

(ஆ) " காய் கறிகளிலிருந்து வேறாக " என்னும் பதங்களுக்குப் பதிலாக " அரிசி, கறிச் சரக்குகள், காய் கறிகளிலிருந்து வேறாக " என்னும் பதங்களை வைத்தும்.

**17.** இத்துணை விதிகளில்—

" தலைவர் " என்பது சங்கத் தலைவர் எனப் பொருள்படும் ;

" சங்கம் " என்பது கிராமப் பிரதேசத்துக் கிராமச் சங்கம் எனப் பொருள்படும் ;

" கட்டளைச் சட்டம் " என்பது 1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சங்கக் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 257) எனப் பொருள்படும்.

" கிராமப் பிரதேசம் " என்பது யாழ்ப்பாண மாவட்டத்து புலோப்பளை கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும்.

11—1196

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க சுரசுராலய அதிபர். கருமாலயம். கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.